1971 சூலை 30]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டத்தில், வத்திராயிருப்புக்கு அருகேயுள்ள சதுரகிரி மலையில் உள்ள ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி கோவிலுக்கு, இடது தந்தம் மட்டும் உள்ள யானை ஒன்று தவறுமல் வந்து கொண்டிருந்ததாகவும், பின்பு அந்த யானை இறந்துவிட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலுள்ளவர்கள், இறந்து போன அந்த யானையின் நடத்தை தனித்தன்மை வாய்ந்ததாகக் கருதி, அதன் தந்தத்தைக் கோவிலில் வைத்துப் பாதுகாத்து வழிபட விரும்பினார்கள். பொது மக்களிடமிருந்து வந்த மனுக்களை அரசு பரிசீலித்து, இறந்துபோன அந்த யானையின் தந்தத்தைக் கோவிலில் வைப்பதற்கு இனமாகக் கொடுக்க 13—5—1971ல் அரசு ஆணையிட்டுள்ளது.

Nationalisation of Bus routes

* 575 Q.—THIRU N. K. PALANISAMI :
THIRU N. KUTTAPPA :
THIRU A. M. RAJA :

Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the Government to further nationalise some more bus routes in the State?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 31—3—1971 வரை 302 பேருந்து வழித்தடங்களை அரசு எடுத்துக் கொண்டுள்ளது. 1971–1972-ல் 184 வழித்தடங்களையும், 1972–73-ல் 34 வழித்தடங்களையும் அரசு மேற்கொள்ளும்.

அதுவன்றியும் 50-க்கு மேல் உள்ள வழித்தடங்களை எடுத்துக் கொள்வதன் மூலம் 550 பேருந்துகள் தேச உடமையாக்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா: அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 500-க்கு மேற்பட்ட பஸ்கள் நாட்டுடைமை ஆக்கப்படும் என்ருர்கள். இன்றைய தினம் அந்த பஸ் கம்பெனிகளில் பஸ்களை சரிவரப் பழுது பார்க்காமல் இருக்கிருர்கள். ஆகவே, அந்த பஸ்களுக்கு நஷ்டஈடு கொடுக்கிறபோது குறைவாகவே கொடுக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேருந்துகள் பழுது பார்க்கப்படு கின்றனவா இல்லையா என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனல் அவைகளுக்குரிய கட்டணத்தைத் தருவது என்று தீர்மானித்திருக் கிறோம். பாராளுமன்றத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய சட்ட திருத்தம் வர இருக்கிற காரணத்தினல் அதுபற்றி அறிந்த பிறகே அரசு முடிவு எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஐம்பது மைல்களுக்கு மேல் உள்ள வழித்தடங்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்கப்படுகிற சட்டம் இந்தச் சட்டத் தொடரிலே வராவிட்டாலும் அடுத்த தொடருக்குள் ளாவது வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினருக்கு உள்ள ஆர்வத்தைப்போலத்தான் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர வேண்டுமென்று இருந்தோம். நாடாளு

[1971 சூலை 30

மன்றத்தில் நஷ்ட ஈடு என்பதற்குப் பதிலாக "தொகை" என்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். முடிவு தெரிந்த பிறகு வேண்டுமென்றால் அவசரச் சட்டம் கூட வரலாம்.

திரு. நா. வீராசாமி : இப்போது டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் நிறுவுவதற்கான சூழ்நிலை இருப்பதால் 50 மைல்களுக்கு மேற்பட்ட வழித்தடங்களை அரசுடைமையாக்குகிற திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஐம்பது மைல்கள் அல்ல, ஐம்பது வழித்தடங்களுக்கு மேலுள்ளவற்றை நாட்டுடைமையாக்க இருக்கிறோம். ஐம்பது மைல்களுக்கு மேல் உள்ளவற்றை நாட்டுடைமையாக்குவதுபற்றிப் பின்னர் யோசிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : 75 மைல்களுக்கு மேலுள்ள வழித்தடங்களை எல்லாம் நாட்டுடைமையாக்கும் திட்டம் இருந்ததே, அது இதனால் கைவிடப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாட்டுடைமையாக்கும் திட்டத்தை இந்த அரசுக்கு கைவிடும் வழக்கம் இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : 75 மைல்களுக்கு மேலுள்ள வழித்தடங்களை நாட்டுடைமையாக்குகிறபோது அந்த நிர்வாகத்தினர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். மேலும் 72, 71 என்று மைல்களைக் குறைத்துக் கொண்டு அவர்களும் பஸ் ஓட்டுகிற காரணத்தினால் அரசாங்கப் போக்குவரத்துத் துறைக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே இந்த மாநிலத்தில் ஓடுகிற அத்தனை பஸ்களையும் அரசு நாட்டுடைமையாக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல நீதி மன்றத்திற்குச் சென்று தடை வாங்கி பேருந்து விடுகிறார்கள். வழித்தடத்தின் நீளத்தைக் குறைத்துக் கொள்ளவும் இப்போது சட்டத்தில் வாய்ப்பிருக்கிறது. அதை அறிந்துதான் அண்ணா அவர்கள் நீதி தேவன் மயக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether the Bill that has been circulated to us will be taken up for consideration in this Session or will it be taken only after the amendment of the Fundamental Rights Chapter has been done in Parliament?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The later part of the suggestion will be accepted by the Government.

MR. SPEAKER : Questions and Answers are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]